BRAMPTON **Service and Information Update**

# சமுதாயத்தினரை பாதுகாப்பாக வைப்பதற்காக தனியார் சொத்துக்களில் வாகனப் பாதையமைக்கும் பணிகளுக்கான விதிமுறைகளை நகர நிர்வாகம் கடுமையாக்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 27, 2021) – பாதுகாப்பான வீடுகள் மற்றும் பாதுகாப்பான சமுதாயத்தை உருவாக்குவதற்காக, தனியார் இடங்களில் வாகனம் ஓடும் பாதை அமைக்கும் ஒப்பந்ததாரர்களுக்கான விதிமுறைகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கடுமையாக்குகிறது.

இந்த ஆண்டில் புதியதாக, ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தனியார் வாகனப்பாதை அமைப்பவர்கள்/செப்பனிடுபவர்கள் தங்களுக்கான உரிமம் பெறுவதற்கு முன்பாக நகர நிர்வாகம் அளிக்கின்ற ஆன்லைன் பயிற்சியை முடிக்க வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் இப்போது பாதுகாப்பு வைப்பு நிதி செலுத்தவேண்டியது கட்டாயமாகும். உரிமம் வழங்கல் மற்றும்/அல்லது புதுப்பித்தல்களுக்கான இந்த முன் தேவைகள், தனியார் வாகனஓடுபாதைகளில் சட்டவிரோத கட்டுமானத்தைத் தவிர்ப்பதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையே ஆகும்.

மாகாண அரசின் "வீட்டிலேயே இருக்கவும்" என்னும் ஆணை நீக்கப்படும் போது, உப-சட்டம் மற்றும் சட்ட அமலாக்க சேவை ஊழியர்கள் நகரத்தின் பல்வேறு உப சட்டங்களுக்கு இணங்காமல் கட்டப்படும் தனியார் வாகனஓடுபாதைகளை அமைத்தது அல்லது விரிவாக்கம் செய்தது பற்றிய விசாரணைகளை மீண்டும் தொடங்குவார்கள்.

வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு அதிக இடம் சேர்ப்பது, நடைபாதைக் கற்களை கூடுதலாக பாவுவது அல்லது தங்களின் வாகன ஓடுபாதையை கெட்டிப்படுத்துவது போறை வேலைகளைச் செய்ய திட்டமிடும் குடியிருப்பாளர்கள் பின்வரும் உதவிக்குறிப்புகளை மனதில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- ஒரு ஒப்பந்தக்காரர், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தினால் உரிமம் பெற்றவரா என்பதைச் சரிபார்க்கவும். உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்களின் பட்டியல் ஆன் லைனில் கிடைக்கிறது.
- தாங்களாகவே செய்து கொள்ளும் (DIY) திட்டங்களுக்கு, தனியார் வாகன ஓடுபாதையின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட அகலத்தை உறுதிப்படுத்த நகர நிர்வாகத்திடம் சரிபார்க்கவும், தடுப்பு கட்டுவதற்கும் (curb cut )அனுமதி தேவைப்படுமா எனவும் சரிபார்க்கவும்
- தனியார் சொத்தில் வாகன ஓடுபாதை அமைக்கும் பணியின்போது பயிற்சி பெற்ற நபர்கள் சம்பந்தப்பட்ட ஸ்தலத்தில் இருக்க வேண்டும்.

கட்டுமானம் சட்டப்படி இருப்பதையும் நகரின் உப சட்டங்களுக்கு உட்பட்டு இருப்பதையும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் ஆகிய இரு தரப்பினருமே உறுதி செய்வதற்கு பொறுப்பாகிறார்கள்.

மேலும் தகவலுக்கு, www.brampton.ca/drivewaypaving ஐப் பார்வையிடவும்

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca